<u>அசல் வழக்கு எண்.20/2019</u>

<u>தேதி: 27.06.2023.</u>

<u>வா.சா.1:</u> (திருமதி.பிரியா த/பெ. நித்தியானந்தம்)

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.3 கிரயப்பத்திரம் என்னுடைய தாயார் கண்ணப்ப நாயக்கரிடம் கிரயம் பெற்ற தாவா 1வது அயிட்ட சொத்து என்றால் சரி தான். அயிட்டம் எண்.1-ல் தான் என்னுடைய பெற்றோரும் சகோதரரும் வசித்து வருகிறார்கள் என்றால் சரி தான். வா.சா.ஆ.4 கிரயப்பத்திரம் என்னுடைய தகப்பனார் கிரயம் பெற்ற தாவா 3வது அயிட்ட சொத்து அதில் இரண்டு கடைகள் உள்ளது என்றால் சரி தான்.

வா.சா.ஆ.5 கிரயப்பத்திரம் என்னுடைய தகப்பனார் கிரயம் பெற்ற தாவா அயிட்டம் 4 என்றால் சரி தான். வா.சா.ஆ.5ல் கண்ட சொத்தை என்னுடைய தகப்பனார் அவருடைய மைத்துனர் மற்றும் மாமியாரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து என்றால் சரி தான். தாவா 4வது அயிட்ட சொத்தில் ஓட்டலும் கடையும் உள்ளது என்றால் சரி தான். தாவா 4வது அயிட்ட சொத்தில் உள்ள கடையில் என் கணவர் வாடகைக்கு இருந்தார் என்றால் சரியல்ல. நான் தான் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன்.

வா.சா.ஆ.6 முதல் 12 வரையானவை வந்தவாசி வட்டம் ஆராசூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களுக்கான ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் தாவாவில் அயிட்டம் 5 முதல் 15 வரையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.13 கிரயப்பத்திரம் என் தகப்பனார் அம்மையப்பட்டு கிராமத்தில் சொத்துக்களை வாங்கியதற்கான கிரயப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் தாவாவில் 16 முதல்

**49 வரையான அயிட்ட சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.14 மற்றும் 15 ஆகியவை ஜெராக்ஸ் நகல்கள் என்றாலும், பதிவு நகல்கள் இல்லை என்றாலும் சரி தான்.**

**வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional District Judge,
Fast Track Court, Arani.